**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்**

**தேதி 16.03.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல கணினி நிபுணர் திரு. லெக்ஸ் ஃபிரிட்மேனுடன் நடத்திய பாட்காஸ்ட் கலந்துரையாடல் இன்று மாலை ஒலிபரப்பாகியது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை புதுடெல்லியில், நியூசிலாந்து பிரதமருடன் இணைந்து, ரெய்சினா உரையாடல்நிகழ்ச்சியை தொடக்கி வைக்க உள்ளார்.

அசாம் மற்றும் மிசோரம் மாநிலங்களில் 3 நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று மிசோரமில், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

காரைக்கால் அகில இந்திய வானொலி நிலையம், விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் துல்லியமான தகவல்களை வழங்கி வருவதாக, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

---

*மோடி (13)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அமெரிக்காவைச் சேர்ந்த கணினி நிபுணரும், ஊடகவியலாளருமான திரு. லெக்ஸ் ஃபிரிட்மேனுடன் நடத்திய பாட்காஸ்ட் கலந்துரையாடல் இன்று மாலை ஒலிபரப்பாகியது. இந்த

கலந்துரையாடல் தொடர்பாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் சுமார் 3 மணி நேரம் நடைபெற்ற இந்த கலந்துரையாடல், தமக்கு சிந்தனையை தூண்டும் வகையில் அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார். பாலிய பருவம், இமயமலையில் தாம் கழித்த சில காலங்கள், பொது வாழ்க்கையில் தமது பயணம் உட்பட பல்வேறு வகையிலான தலைப்புகளில் கலந்துரையாடியதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, திரு. லெக்ஸ் ஃபிரிட்மேன் வெளியிட்டுள்ள தமது சமூக வலை தளப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடியுடனான இந்த கலந்துரையாடலே தமது வாழ்க்கையில் நடத்திய மிகப் பெரிய கலந்துரையாடலாக அமைந்துள்ளதாக கூறியுள்ளார்.

----------------------------

*நியூசிலாந்து பிரதமர் (12)*

நியூசிலாந்து பிரதமர் திரு. கிரிஸ்டோபர் லக்சான், 5 நாள் அரசு முறைப் பயணமாக இன்று புதுடெல்லி வரவுள்ளார். இதுதொடர்பாக, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நியூசிலாந்து பிரதமர் நாளை பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளது. பின்னர், புதுடெல்லியில் நடைபெறும் 10ஆவது ரெய்சினா மாநாட்டில் நியூசிலாந்து பிரதமர் திரு. கிரிஸ்டோபர் லக்சான் தலைமை விருந்தினராக பங்கேற்க உள்ளார். தொடர்ந்து அவர், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி

முர்முவையும் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளார். பின்னர் மும்பை செல்லும் அவர், அங்கு வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாட உள்ளார். அவருடன் அந்நாட்டு உயர் அதிகாரிகள், அமைச்சர்கள், வர்த்தக மற்றும் ஊடக நிறுவனத்தினர் இந்தியா வரவுள்ளனர்.

----------------------------

*ரெய்சினா மாநாடு (9)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை புதுடெல்லியில், நியூசிலாந்து பிரதமருடன் இணைந்து, ரெய்சினா உரையாடல்நிகழ்ச்சியை தொடக்கி வைக்க உள்ளார். ரெய்சினா உரையாடலின் 10ஆம் பதிப்பு நாளை முதல் வருகிற 19ஆம் தேதி வரை, புதுடெல்லியில் நடைபெற உள்ளது. ரெய்சினா உரையாடல் என்பது, உலக சமூகம் எதிர்கொள்ளும் சவாலான பிரச்சனைகளை தீர்க்க நடத்தப்படும் ஒரு மாநாடாகும். இந்த மாநாட்டில், அரசியல், வணிகம், ஊடகம் மற்றும் பல்வேறு உலக பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்படுகிறது. மாநாட்டை வெளியுறவுத் துறை அமைச்சகத்துடன் இணைந்து அப்சர்வர் என்ற ஆராய்ச்சி அறக்கட்டளை நடத்துகிறது.

----------------------------

*மோர்கன் ஸ்டேன்லி அறிக்கை (16)*

வரும் 2028ஆம் ஆண்டிற்குள், ஜெர்மனியை பின்னுக்கு தள்ளி, இந்தியா உலகின் 3ஆவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று, உலக நிதிச் சேவை நிறுவனமான மோர்கன் ஸ்டேன்லி

தெரிவித்துள்ளது. 2023ஆம் ஆண்டில் இருந்து இந்திய பொருளாதாரம் வளர்ந்து வரும் நிலையில், 2028ஆம் ஆண்டு ஜெர்மனியை பின்னுக்கு தள்ளி, இந்திய பொருளாதாரம் 5.7 டிரில்லியன் டாலர் அளவுக்கு உயரும் என்று இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வெறும் பொருளாதாரக் கொள்கைகள், மற்றும், மேம்பட்ட உள்கட்டமைப்பு ஆகியவற்றின் பயனாக, இந்தியா, உலகின் மிகவும் விரும்பத்தக்க நுகர்வோர் சந்தையாக உருவெடுத்துள்ளது என்றும் அந்த அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டில் உலகப் பொருளாதார நாடுகளின் தரவரிசையில் 12ஆவது இடத்தில் இருந்த இந்தியா, படிப்படியாக முன்னேறி 2023ஆம் ஆண்டில், 5ஆவது இடத்திற்கு முன்னேறியதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 2029ஆம் ஆண்டிற்குள் உலக ஒட்டுமொத்த உற்பத்தியில் 4.5 சதவிகிதத்தை இந்தியா பங்களிக்கும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

-----------------------------

*அமித் ஷா (11)*

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, அசாம் மற்றும் மிசோரமிற்கு 3 நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். அசாமின் கோலாகாட் மாவட்டத்தில் அவர் நேற்று போலீஸ் அகாடமியை திறந்த வைத்தார். மேலும், மிசோரமில் உள்ள ஐஸ்வாலில், அசாம் ரைஃபிள்சின் நிகழ்ச்சியில் பங்கேற்றார். இன்று காலை மத்திய உள்துறை அமைச்சர்

திரு. அமித் ஷா, பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக அசாமில் இருந்து, மிசோரமிற்கு சென்றுள்ளார். அங்கு, கோக்ரஜார் மாவட்டத்தில் உள்ள டோட்மாவில் நடைபெறும் அனைத்து போடோ மாணவர் சங்கத்தின் 57ஆவது மாநாட்டில் பங்கேற்று உரையாற்றுகிறார். பின்னர் இன்று மாலை, குவஹாத்தியில் நடைபெறும் புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துவது குறித்த நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்று உரையாற்றுகிறார்.

----------------------------

*அஷ்வினி வைஷ்ணவ் (17)*

சென்னை ஐஐடியில் உள்ள 410 நீளமுள்ள ஹைப்பர் லூப் சோதனைக் குழாய், ஆசியாவிலேயே மிக நீளமான ஹைப்பர் லூப் சோதனை வசதி என்றும், இது, விரைவில் உலகின் மிக நீளமானதாக மாறும் என்று, மத்திய ரயில்வே, தகவல்-ஒலிபரப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். சென்னை அருகே ஸ்ரீபெரும்புதூரில் அமைக்கப்பட்டுள்ள மின்னணுவியல் மையத்தை அவர் தொடக்கி வைத்தார். தொடர்ந்து அதன் விரிவாக்கத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் பேசிய அவர், அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ், மேலும் 77 ரயில் நிலையங்கள் விரைவில் சீரமைக்கப்பட உள்ளதாகவும், 715 ரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தமிழகத்தில் தற்போது 8 வந்தே பாரத் ரயில்கள்

இயக்கப்படுவதாகவும் அவர் கூறினார். ஜெட் வொர்க் மின்னணுவியல் தொழிற்சாலை 200 கோடி ரூபாய் செலவில், 15 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மேலும், தமிழகத்தில், ஆயிரத்து 112 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 மின்னணு உற்பத்தி ஆலைகள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

----------------------------

*தடுப்பூசி தினம் (10)*

தேசிய தடுப்பூசி தினம் இன்று கொண்டாடப்படுகிறது. நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் மார்ச் 16ஆம் தேதி, தேசிய தடுப்பூசி தினம் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தை ஒட்டி, மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில், குழந்தைகளை நோயில் இருந்து பாதுகாப்பதை இத்தினம் இலக்காகக் கொண்டு நாடு முழுவதும் தடுப்பூசி இயக்கம் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது. குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் மாநில அரசுகள் மற்றும் முன்களப் பணியாளர்களுடன் இணைந்து மத்திய சுகாதார அமைச்சகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

----------------------------

*ஃபிட் இண்டியா (14)*

மத்திய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று மாலை புதுடெல்லியில் உள்ள

ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானத்தில், ஃபிட் இண்டியா கார்னிவலை, தொடக்கி வைக்க உள்ளார். இந்நிகழ்ச்சியில், மல்யுத்த வீரர்கள், உடற்பயிற்சி ஆர்வலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர். 3 நாட்கள் நடைபெறும் இந்த உடற்பயிற்சி மற்றும் நல்வாழ்வு விழாவான ஃபிட் இண்டியா கார்னிவல், ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விழாவில் கயிறு தாண்டுதல், சைக்கிள் ஓட்டுதல், மல்யுத்தம், கிரிக்கெட் பந்து வீச்சு உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற உள்ளன. இந்நிகழ்ச்சியில் வரவிருக்கும் கேலோ இண்டியா, பாரா விளையாட்டுகளுக்கான சின்னம், அவற்றிற்கான பாடல்கள் ஆகியவை வெளியிடப்படும். கேலோ இண்டியா பாரா விளையாட்டுகள் இம்மாதம் 20ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை புதுடெல்லியில் நடைபெற உள்ளது.

-----------------------------

*முருகன் (14)*

காரைக்கால் அகில இந்திய வானொலி நிலையம், விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் துல்லியமான தகவல்களை வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருவதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பாராட்டு தெரிவித்துள்ளார். 31ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் காரைக்கால் அகில இந்திய வானொலி நிலையத்தை ஆய்வு செய்த மத்திய அமைச்சர், தொடர்ந்து சிறப்பாக செயல்பட வேண்டும் என்று, அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அவர் தமது வருகையின் நினைவாக, காரைக்கால் வானொலி நிலைய வளாகத்தில் மரக்கன்று ஒன்றினை நட்டார். கடலோர மாவட்டங்களை உள்ளடக்கி அமைந்துள்ள இந்த வானொலி நிலையம் மீனவர்களுக்கான மத்திய அரசின் திட்டங்கள் குறித்து, முக்கியத்துவம் அளித்து, தகவல்கள் ஒலிபரப்பி வருவதை அவர் சுட்டிக் காட்டினார். காரைக்கால் வானொலி நிலையம் மூலம் பயனுள்ள நிகழ்ச்சிகளை மேலும் சிறப்பாக வழங்க முன்வருமாறு அலுவலர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

----------------------------

*முர்மு* (7)

ஒடியா இலக்கியத்தில், மிகவும் புகழ்பெற்ற நவீனத்துவ கவிஞர்களில் ஒருவரான, பத்மபூஷன் ரமாகாந்த ரத் இன்று காலை புவனேஷ்வரில் காலமானார். அவருக்கு வயது 91. அவரது மறைவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். இந்திய இலக்கிய உலகில் ரமாகாந்த ரத் ஒரு முக்கிய நபராக இருந்ததாகவும், பத்மபூஷன் உட்பட பல விருதுகளால் அவர் கவுரவிக்கப்பட்டவர் என்றும் குடியரசுத் தலைவர் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

----------------------------

*ரிசர்வ் வங்கி* (8)

இந்திய ரிசர்வ் வங்கி, லண்டன், இங்கிலாந்து மத்திய வங்கியால், 2025ஆம் ஆண்டிற்கான டிஜிட்டல் உருமாற்ற விருதுக்கு தேர்ந்தெடுக்கப்

பட்டதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பாராட்டி உள்ளார். இதுதொடர்பாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில், இந்த சாதனை புதுமை மற்றும் நிர்வாகத்தில் செயல்திறன் மீதான முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது என்றும், அவர்தெரிவித்துள்ளார். டிஜிட்டல் கண்டுபிடிப்பு, இந்தியாவின் நிதி சுற்றுச் சூழல் அமைப்பை தொடர்ந்து வலுப்படுத்தி, மேம்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

-----------------------------

*பத்ம விருதுகள் (15)*

நாட்டின் உயரிய விருதுகளான பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்மஸ்ரீ ஆகிய விருதுகள் ஒவ்வொரு ஆண்டும், குடியரசு தினத்தன்று அறிவிக்கப் படுகின்றது. இந்த விருதுகள், கலை, இலக்கியம்,கல்வி, விளையாட்டு, சமூகப் பணி, பொறியியல், குடிமைப் பணி, வர்த்தகம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதற்கிடையே, 2026ஆம் ஆண்டிற்கான விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை நேற்று தொடங்கி உள்ளது. வரும் ஜூலை மாதம் 31ஆம் தேதி வரை, இதற்கான விண்ணப்பங்களை ராஷ்ட்ரீய புரஸ்கார் இணைய தளத்தல் சமர்ப்பிக்கலாம் என மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. அரசு ஊழியர்கள், பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிவோர் தவிர, மற்றவர்களுக்கான பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ராஷ்ட்ரிய புரஸ்கார் இணைய தளத்தை தவிர, வேறு எந்த தளத்திலும்

பரிந்துரைகளோ, விண்ணப்பங்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------------------------

இஸ்ரோ (10)

செவ்வாய் கிரகத்திற்கு மாதிரி செயற்கைக் கோளை அனுப்பி, முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்ற முதல் நாடு இந்தியா என்று, இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார். கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 28 ஆயிரத்து 400 கிலோ மீட்டர் தூரத்தில் 2 செயற்கைக் கோள்களை ஒன்றாக இணைத்து, இந்தியா சாதனை புரிந்துள்ளதாக அவர் தெரிவித்தார். விரைவில், சந்திராயன்-4 விண்கலத்தை விண்ணில் செலுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எதிர்காலத்தில் மனிதனை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்திற்கு முன்னதாக, அளில்லாத ராக்கெட்டை அனுப்பும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல கணினி நிபுணர் திரு. லெக்ஸ் ஃபிரிட்மேனுடன் நடத்திய பாட்காஸ்ட் கலந்துரையாடல் இன்று மாலை ஒலிபரப்பாகியது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை புதுடெல்லியில், நியூசிலாந்து பிரதமருடன் இணைந்து, ரெய்சினா உரையாடல்நிகழ்ச்சியை தொடக்கி வைக்க உள்ளார்.

அசாம் மற்றும் மிசோரம் மாநிலங்களில் 3 நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று மிசோரமில், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

காரைக்கால் அகில இந்திய வானொலி நிலையம், விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் துல்லியமான தகவல்களை வழங்கி வருவதாக, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பாராட்டு தெரிவித்துள்ளார்.